මගේ අංකය
எமது இல
My No.
VV/4/GC/33(ii) 34 (i)

ඔබේ අංකය
Your No.
உமது இல

දුරකථනය
தொலைபேசி
Telephone
2881000
2853777

ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
THE OPEN UNIVERSITY OF SRI LANKA

තැපැල් පෙට්ටිය 21
නාවල
නුගේගොඩ

அஞ்சற் பெட்டி 21
நாவல
நுகேகொட

Post Office Box 21
Nawala
Nugegoda

07 ஒக்டோபர் 2021

அன்புள்ள பட்டம் பெறுனருக்கு ,

<u>பொதுப் பட்டமளிப்பு</u>

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் எதிர்வரும் பட்டமளிப்பு விழாவில் பட்ட உறுதிப்படுத்தலுக்கு நீங்கள் தகுதிபெற்றுள்ளீர்கள் என்பதை உங்களுக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டில் தற்போது நிலவும் கோவிட்-19 பெருந்தொற்று நிலைமை காரணமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 33 வது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி மற்றும் 34 வது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி என்பன இரண்டு படிமுறைகளில் நடைபெற உள்ளது.

பட்டப்பின் பட்டம் மற்றும் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் மற்றும் பட்டம் என்பன உறுதிப்படுத்தப்பட்டவர்களுக்கான பட்டமளிப்பு விழாவானது வேந்தரின் தலைமையில் 2 நவம்பர் 2021 அன்று இலங்கை திறந்த பல்கலைக்கழக வளாகத்தில் உத்தியோகபூர்வமாக இடம்பெற உள்ளது. **(சிறிய எண்ணிக்கையான ஆராய்ச்சிப் பட்ட பட்டதாரிகளுக்கு மாத்திரம் நேரடியாக அவர்களது பட்டமளிப்பு சான்றிதழ் வழங்கிவைக்கப்படவுள்ளது.**

மேற்குறிப்பிட்ட பட்டமளிப்பில் பட்டம் உறுதிப்படுத்தப்பட்டோருக்கான வைபவமொன்று அத்தகைய ஒன்றுகூடல்களை நடத்த சாத்தியமான சூழ்நிலை ஏற்படுகின்ற போது நடத்தப்படும். இவ் வைபவம் குறித்த விடயங்கள் பின்னொரு திகதியில் தெரியப்படுத்தப்படும்.

இந் நோக்கத்திற்கான கட்டணம் செலுத்தும் வவுச்சரினை உருவாக்க கீழே தரப்பட்டிருக்கும் web link இனை இனங்கண்டு கொள்ளவும். பின்வருமாறு உரிய பட்டமளிப்பு கட்டணத்தினை செலுத்துவதற்கு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள்.

| | |
|---|---|
| பட்டம் | ரூ. 2,200.00 |
| பட்டப்பின் பட்டம் | ரூ. 3,500.00 |

https://reginfo.ou.ac.lk/

விண்ணப்பப் படிவத்தினை (Google form ஊடாக ) பூரணப்படுத்துவதற்கு பின்வரும் link இனை click செய்யவும் அத்துடன் விண்ணப்பப்படிவத்துடன் கட்டணம் செலுத்திய சிட்டினையும் இணைத்து 17/10/2021 அன்று பி.ப. 4.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கவும்.

https://forms.gle/r63psxGcRRCegb2p7

**<u>17/10/2021 அன்று பி.ப 4.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் இப் பட்டமளிப்பிற்காக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.</u>**

சகல கொடுப்பனவுகளும் நிகழ்நிலைப் பரிமாற்றம் ஊடாக அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் நுகேகொட கிளையின் மக்கள் வங்கி, **“சேகரிப்புகணக்கு இல. 0174 1001 5 1189657** இல் வரவிலிடப்படல் வேண்டும். பணம் செலுத்தும் உறுதிச் சீட்டின் பல்கலைக்கழகப் பிரதி (இரண்டாவதுபிரதி) அல்லது நிகழ்நிலைப் பரிமாற்ற கட்டணம் செலுத்தியதற்கான உறுதிப்படுத்தல் Google supplication Form இல் இணைக்கப்படுதல் வேண்டும்.

**நீங்கள் ஏ.ரீ.எம் இயந்திரத்தினூடாக பணத்தினை வைப்பிலிடுவதனைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகிறீர்கள்.**

பட்டமளிப்பு விழாவில் பங்குபற்ற உங்களால் இயலாதிருப்பினும், உரிய பட்டத்திற்காக விண்ணப்பிற்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். **இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை (முறையாக பூர்த்திசெய்யப்பட்டது), மேலே குறிப்பிடப்பட்டவாறான கட்டணம் மற்றும் ஏவையேனும் நிலுவைகள் இருப்பின் அவற்றினை செலுத்திய செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றினையும் இணைத்து 17/10/2021 அன்று பி.ப 4.00 மணிக்கு முன்னர் அனுப்பிவைக்கத் தவறினால், உங்களின் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது என்பதை தயவுசெய்து கவனத்திலெடுக்கவும்.**

காசோலைகள், காசுக் கட்டளைகள் அல்லது தபால் கட்டளைகள் ஏற்கப்படமாட்டாது என்பதைக் தயவுசெய்து கவனத்திலெடுக்கவும்.

நாட்டில் தற்போது நிலவும் பெருந்தொற்று சூழ்நிலையினைக் கருத்தில்கொண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது மாணவர்களுக்கு மூலச் சான்றிதழை கூரியர் சேவையொன்றினூடாக வழங்க தீர்மானித்துள்ளது. கூரியர் சேவையினூடாக உங்களது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் Google form ஊடாக உங்களது சம்மதத்தினை வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இது நீங்கள் இருக்கும் இடத்திற்கு விநியோகிக்கப்படும் என்பதுடன் கீழே குறிப்பட்டவாறு கூரியர் கட்டணமாகிய ரூபாய் 300,00 இனை நீங்கள் விநியோகிக்கப்படும் போது செலுத்துதல் வேண்டும் என்பதுடன் ஆவணத்தின் சிட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

நன்றி

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/பரீட்சைகள்

பதிவாளருக்காக

**குறிப்பு.**

01. உங்களின் கட்டணங்கள் நிலுவையிலிருந்தால், சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடில்லை. ஆகவே உங்களின் நிலுவைகள் எவையேனும் இருப்பின் 17.10.2021 க்கு முன்னர் செலுத்துமாறு தயவுடன் ஆலோசனை வழங்கப்படுகின்றது

02. உங்களின் பெயரை எழுதும் போது, நீங்கள் பல்கலைக்கழகத்திற்கு சேருவதற்காக தரப்பட்டதும், உங்களின் பாடநெறி கற்கைகளின் போதும் பாவனையிலிருந்ததுமான பெயருடன் பொருத்தமாகவிருப்பதை தயவுசெய்துஉறுதிப்படுத்திக் கொள்ளவும்.

03. கற்கைநிகழ்ச்சித் திட்டத்திற்குசேரும் போது உங்களால் தரப்பட்ட பெயரிலிருந்து, விண்ணப்பத்தில் எழுதப்பட்டுள்ள பெயர்வேறுபடுமாயின், தயவுசெய்து அதற்கான ஆவணசான்றைச் சமர்ப்பிக்கவும்.

04. உங்களின் தவறினால் சான்றிதழில் உங்கள் பெயர் பிழையாக எழுதப்பட்டால்,தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு மேலதிகமாக ரூபா. 1000/-செலுத்துவதற்கு நீங்கள் உட்படலாம்.

05. பல்கலைக்கழக நூலகத்திலிருந்து நீங்கள் இரவலாகப்பெற்ற அனைத்து புத்தகங்களையும் உங்களது பட்டமளிப்பு திகதிக்கு முன்னராக மீளளிக்குமாறு நீங்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்